10.10.2023
O.S.No.29/2014

வா.சா.1.திருமதி.மகேஸ்வரி. க.பெ. பார்த்தசாரதி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 22.02.2014 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்பு, பிரதிவாதிகள் குடியிருந்து வரும் வீட்டை தொந்தரவு செய்து நாங்கள் அடிதடியில் ஈடுபடவில்லை என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது, நான் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்தேன். வா.சா.ஆ-3 பாகபிரிவினை ஆவணம் அப்துல் சமது, பக்ருதின், கமருதின் ஆகிய மூவரும் 1 வது பார்ட்டியாகவும், தாசில்தீன் என்பவர் 2 வது பார்ட்டியாக இருந்து எழுதப்பட்ட பத்திரம் என்றால் அது எனக்கு தெரியாது, எனது கணவருக்குத்தான் தெரியும். மேற்படி பத்திரத்தில் ஏ செட்டியுலில் தாவா சொத்தான புல எண்.562/1 செண்டு 7 என்பது சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது, எனது கணவருக்குத்தான் தெரியும். மேற்படி வா.சா.ஆ-3 பாகபிரிவினை ஆவணத்தை வைத்து 1988-ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது, எனது கணவருக்குத்தான் தெரியும். நான் தாவா சொத்தை ரசியா பேகம் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன்.

2. நான் கிரையம் வாங்கிய பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-1 ஆவணமா என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தோடு ரசியா பேகத்திற்கு பாத்தியப்பட்ட பட்டா, சிட்டா, வில்லங்கசான்று ஆகியவை இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இதில் இணைக்கப்படவில்லை, ஆனால் ரசியா பேகம் என்னிடம் பட்டா, சிட்டா ஆகியவற்றை கொடுத்தார். ரசியா பேகத்திற்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ரசியா பேகம் தாவா சொத்தை கிரையம் பெற்ற ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-2 ஆவணம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் ரசியா பேகத்திற்கு கிரையம் எழுதி கொடுத்தவர்கள் பெயர் அப்துல் சமது, பக்ருதின், கமருதின் என காணப்படுகிறது. மேற்படி பக்ருதின், ரசியாபேகத்தின் கணவர் என்றால் சரிதான். அதே போல் அப்துல் சமது மற்றும் கமருதின் ஆகியோர்கள் ரசியாபேகத்தின் கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ-2 ஆவணத்தில் அப்துல் சமது, பக்ருதின், கமருதின் ஆகியோர்கள் மற்றும் அவர்களது தாயார் சுலைகாபீவி சேர்ந்து 12.04.1988 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகவிரிவினை பத்திரத்தின் படி சொத்துக்களை பிரித்து கொண்டதாக சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். 1986 ம் வருடம் ஏற்பட்ட பதிவு செய்யப்படாத பாகபிரிவினை பத்திரமான வா.சா,ஆ-3 ஆவணத்தில் கண்டுள்ள அப்துல் சமது, பக்ருதின், கமருதின் ஆகியோர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட ஏ செட்டியுல் சொத்துக்களை 1988 ம் ஆண்டு 5 பாகங்களாக பிரித்து ஏ செட்டியுல் சுலைகாபிவிக்கும் பி செட்டியுல் அப்துல் சமதுக்கும் சி செட்டியுல் பக்ருதினுக்கும் டி செட்டியுல், கமருதினுக்கும் இ செட்டியுல் சொத்து பிரிவினைக்கு தோது இல்லாமல் இருப்பதால் மேற்கண்ட நான்கு நபர்களும் பொதுவாக அனுபவித்து கொள்ள வேண்டி பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இ செட்டியுல் சொத்தில் இந்த தாவா சொத்து கட்டுப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

4. நான் 2010ம் ஆண்டு ரசியா பேகத்தை அனுகி தாவா சொத்தை எனக்கு கிரையம் கேட்டு அதில் வரும் வில்லங்கத்தை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் அவர்களது முன்னோர் காலத்தில் இருந்து காலம் காலமாய் பண்ணை பணியாளர்களாக இருந்து வந்ததின் அடிப்படையில் அவர்களுக்கு வாய்க்கரால் கிரையத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதால்தான் இந்த சொத்தை 1988ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தில் பிரிக்கப்படாத சொத்தாக இ செட்டியுலில் காட்டப்பட்டுள்ளது என்றாலும், இதை மறைத்து பிரதிவாதிகளின் உரிமையை பறிக்கும் நோக்கில் நானும், ரசியா பேகமும் கூட்டு சேர்ந்து வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. சுலைகா பீவீ உயிருடன் இருந்த வரை தாவா சொத்து எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தபடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

5. பிரதிவாதி எந்தவித தொந்தரவும் இல்லாமல் நான் தாவா சொத்தை கிரையம் வாங்கும் வரை அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தாவா சொத்தை கிரையம் வாங்கி கொட்டகை அமைத்த பின்புதான், பிரதிவாதி எங்களிடம் வந்து பிரச்சினை செய்தார். லட்சுமி மகள் கலைவாணியிடமும் பிரதிவாதி பண்ணை பணியாளராக இருந்து வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கலைவாணி, தாவா சொத்தில் பிரதிவாதி ஓட்டுவீடு அமைப்பதற்கு தன்னுடைய பழைய ஓட்டுவீட்டை அகற்றிவிட்டு, அதில் உள்ள பொருட்களை பிரதிவாதிக்கு வழங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் தான் ஓட்டு கொட்டகை அமைத்தோம். பக்ருதின், அப்துல் சமது, கமருதின் ஆகியோருடன் சேர்ந்து இன்னும் 5 நபர்கள் அந்த சொத்திற்கு பாத்தியப்பட்ட நிலையில் அவர்களைத் தவிர்த்து இவர்கள் மூவரும் மட்டும் பாகபிரிவினை ஏற்படுத்திக்கொண்டது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

6. 1986ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தில் அப்துல் சமது, பக்ருதின், கமருதின் மட்டும் பாகம் பிரித்ததாக பத்திரம் எழுதிக்கொண்டு பின்பு 1988ம் ஆண்டு அவர்களது தாயாரான சுலைகாபிவியையும் சேர்த்நது மற்றொரு பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றாலும், அந்த ஆவணமும் செல்லதக்கதல்ல என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகபிரிவினை பத்திரங்கள் ஜமாத்தார் முன்னிலையில் ஏற்படுத்தி இருக்கலாம் அல்லது சட்டப்படி பாகஸ்தர்கள் அனைவரும் உட்கார்ந்து சமமாக பிரித்திருக்கலாம், அதை எதையும் செய்யாததால் மேற்படி பாகபிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து முறையான உரிமையாளரிடம் இருந்து கிரையம் வாங்காததால் எனது கிரையம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல, நான் முறையான உரிமையாளரிடம் இருந்து கிரையம் பெற்றிருந்தால் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரமும் சேர்த்து கேட்டிருப்பேன் என்றாலும், முறையான உரிமையாளரிடம் இருந்து கிரையம் பெறாததால் விளம்புகை பரிகாரம் எதுவும்

கேட்கவில்லை என்றால் சரியல்ல. அதே போல் இந்த பிரதிவாதி 1988, 2010, 2011 ஆகிய பத்திரங்களை செல்லாது என கோரி மாண்பமை சார்பு நீதிமன்றம், மேலூரில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அவ்வாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டதாக எனக்கு எந்த தகவலும் இன்று வரை இல்லை. ஆகையால் எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.